# வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
# காயல்பட்டணம்
## மாணவப் பேரவை நிறைவுவிழா 02.06.2022

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 02.06.2022 வியாழக்கிழமை காலை 11 மணியளவில் கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யிது அப்துர் ரஹ்மான் அவர்கள் தலைமையில் மூன்றாமாண்டு கணிதவியல் துறை மாணவி Z.A. ஜெய்னம்பு கிராத் ஓத, தமிழ்த்தாய் வாழ்த்துடன் மாணவப் பேரவை நிறைவுவிழா தொடங்கியது. மாணவப் பேரவை துணைத்தலைவர் இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவி ஆ.டு. செய்யது சுகைனா வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரிச் செயலர் வாவு M.M. மொகுதஸீம் B.A (CS), கல்லூரி துணைச்செயலர் ஹாஜி ஹாபிஸ் வாவு S.A.R. அஹமது இஸ்ஹாக் ஆலிம் M.A., Azhari (Egypt), கல்லூரி இயக்குநர் முனைவர். மெர்சி ஹென்றி M.A., Ph.D. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி முதல்வர் முனைவர் இரா.செ. வாசுகி M.A., Ph.D., DGT மாணவப் பேரவை நிறைவுநாள் விழா சிறப்புரை ஆற்றினார். மன்றச் செயல்களிலும், குழுசெயல்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வெற்றி பெற்ற மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

பரிசுகளை கல்லூரி நிர்வாகக்குழு உறுப்பினார்கள் மாணவியர்க்கு வழங்கினார். கல்லூரி விற்பனை விழாவில் இயற்பியல் துறை முதலிடத்தையும், வணிக செயலாற்றியல் துறை இரண்டாமிடத்தையும் பெற்றன. கல்லூரிக் கலைவிழாவில் கணினி அறிவியல் துறை முதலிடத்தையும் பெற்றது.

மாணவப் பேரவைச் செயலர் மூன்றாமாண்டு வணிகவியல் துறை மாணவி I.பஸ்மிலா நன்றியுரை நல்கினார். மாணவப் பேரவைத் துணைத்தலைவர் இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவி M.L. செய்யது சுகைனா துஆ ஓத, நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவடைந்தது. விழாவில் கல்லூரி நிர்வாக உறுப்பினர்கள், உதவிப்பேராசிரியர்கள் மாணவியர் அனைவரும் கலந்து கொண்டனர்.